| Scale | F | Tempo | 100 | Style | Latin> Disco Latin |
|---|---|---|---|---|---|

16. என் ஆத்மா கர்த்தரின்

என் ஆத்மா கர்த்தரின் ஆலயப்பிரகாரங்களில்
வாஞ்சையும் தவனமுமாய் என்றும் இருக்குதே
எந்தன் இதயமும் எந்தன் மாம்சமும்
தேவனை நோக்கி ஆர்ப்பரிக்கும் (சங் 84:2)

1

இருந்தவரும் இன்றும் இருக்கிறவரும்
வருகிறவருமாகிய எந்தன் இயேசுவை (வெளி 11:17)
பரிசுத்தர் பரிசுத்தர் என்று போற்றிடுவோம் (ஏசா 6:3)
இரவும் பகலும் துதித்திடுவோம் (அப் 26:7)

2

மகிமையும் கனமும் அவர் சமுகத்தில்
வல்லமை மகிழ்சியும் அவர் ஸ்தலத்தில் (1நாள 16:27)
தேவனின் நாமத்தை பாட்டினால் துதித்து
மகிமைப்படுத்துவோம் ஸ்தோத்திரத்தினால் (சங் 69:30)

3

நம்மை உண்டாக்கின கர்த்தர் முன்பாகவே
பணிந்து குனிந்து முழங்கால் படியிட்டு (சங் 95:6)
ஸ்தோத்திர பலிகளை செலுத்தி என்றும்
அவர் கிரியைகளை விவரிப்போம் (சங் 145:6)

4

ஆராய்ந்து முடியாத மாபெரும் காரியங்கள்
எண்ணி முடியாத அதிசயம் செய்தவரை (யோபு 5:9)
உயிரோடிருக்குமட்டும் கர்த்தரை துதிப்போம்
உள்ளளவும் அவரை கீர்த்தனம் பண்ணுவோம் (சங் 104:33)